**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2015 P.W. 10/L.W.13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயசேகரன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 21.01.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையானது மேற்படி காவல் நிலையத்தில் இல்லை என்றும், வட்டார போக்குவரத்து அலுவலகத்திலும் இல்லை என்றும் இந்நீதிமன்றத்தில் 05.11.2025 அன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் கற்றறிந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞரும் ஆட்சேபனை எதுவும் இல்லை என்றும் மேற்படி வழக்கின் சங்கதிகளை சாட்சியங்களின் அடிப்படையில் தீர்மானம் செய்யவேண்டுமென்று வாய்மொழியாக சொன்னதை கருத்திற்கொண்டு இன்று மேற்படி சாட்சியின் விசாரணை தொடரப்படுகிறது.**

3. இந்த வழக்கின் விசாரணையை முடித்து 30.03.2011 ம் தேதி குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது சட்டப்பிரிவு 304 எ இ.த.ச 1860 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை :

1. 24.02.2011 ம் தேதி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்றேன். நான் சென்று பார்க்கும்போது சம்பவயிடத்தில் தடயப்பொருட்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சாலையில் சக்கர தடங்கள், இரத்த கறை இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலையானது 18 அடி தார் பகுதியும், வலது மற்றும் இடது புறங்களில் 4 அடியும் உள்ளது.

2. வழக்கின் புகார்தாரர் எங்கள் நிலையத்தில் வந்து புகார் எதுவும் தரவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் வைத்து மட்டுமே பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் இருந்து எங்கள் காவல்நிலையத்திற்கு எத்தனை தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் முதல் விசாரணை செய்த ஆய்வாளருக்கு தான் தெரியும். எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை.

3. மேற்படி வாகனத்திற்கு எந்த பக்கம் சேதம் என்று எனக்குத் தெரியாது. மேற்படி சைக்கிளுக்கு எந்த பக்கம் சேதம் என்று எனக்கு தெரியாது. மேற்படி விபத்தில் இறந்துபோன நபருக்கு மேற்படி சம்பவ காலகட்டத்தில் எத்தனை வயதிருக்கும் என்றால் 56 இருக்கும். மேற்படி வயது சம்மந்தமாக எந்தவித ஆவணத்தையும் நான் கேட்டு பெறவில்லை என்றால் சரிதான்.

4. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தை எனக்கு யார் அடையாளம் காட்டித் தந்தார்கள் என்றால் சாட்சி கிருஷ்ணன் என்பவர் அடையாளப்படுத்திக் காட்டினார். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.